# Sri Krishna gAnam
# By UththukkAdu Sri Venkatasubbaiyar
# (in Tamil, Unicode format)

ஸ்ரீ கிருஷ்ணகானம்

ஊத்துக்காடு ஸ்ரீ வெங்கடசுப்பையர் பாடல்கள்

---

**Acknowledgements:** Our Sincere thanks go to Ms. Anamika Gopal for providing us with the books. This work is a result of distributed keying in and proof reading. The scanner credit goes to Dr. S. Anbumani. Following voluteers were involved in keying in and/or proofreading: S. Anbumani, S.Karthikeyan, Vijayalakshmi Periapoilan, Deeptha, Devarajan, Govindarajan and Rathna.

Preparation of HTML and PDF versions:
Dr. Kumar Mallikarjunan, Blacksburg, VA.
© Project Madurai, 1998-2007.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

உ

ஸ்ரீ கிருஷ்ணகானம்

ஊத்துக்காடு ஸ்ரீ வெங்கடசுப்பையர் பாடல்கள்

தொகுத்தவர்
நீடாமங்கலம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாகவதர்

வெளியிட்டவர்:-
K. ராஜம்மாள்

W/o நீடாமங்கலம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாகவதர்

புத்தகம் கிடைக்குமிடம்:
K. ராஜம்மாள்
நெ.5, எல்லையம்மன் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 003.

அச்சிட்டோர் :
ராஜன் & கம்பெனி பிரிண்டர்ஸ், நெ. 1, கூம்ஸ் தெரு, சென்னை - 600 001
போன் : 5384585.

(குறிப்பு: பாடல்கள் 1 முதல் 25 வரை பாகம் 1-ல் இருந்தும், 26 முதல் 65 வரை பாகம் 2-ல் இருந்தும், மற்றவை பாகம் 3-ல் இருந்தும் எடுக்கப்பட்டிருக்கிறது)

## பாடல் அகரவரிசைப் பட்டியல்


| பாடல் எண் | பாடல் முதல் அடி | ராகம் |
|---|---|---|
| | அகணித மஹிமாத்புத | |

| | | |
|---|---|---|
| 72 | லீல | கௌள |
| 28 | அசைந்தாடும் மயில் ஒன்று காணும் | ஸிம்ஹேந்த்ரமத்யம |
| 103 | அடிமுடி காணாத தெய்வத்தின் மேலேறி | ஹுஸேனி |
| 81 | அமுதனுக்கமுதூட்டும் யமுனையாறே | அமீர் கல்யாணி |
| 17 | அலைபாயுதே-- கண்ணா | கானடா |
| 71 | அலைவாய் பழமுதிரும் சோலை | மோஹனம் |
| 27 | அவராக வருவாரோ வரமாட்டார் | ஸரஸ்வதி |
| 31 | ஆக்கப் பொறுத்தவர்க்கு | காம்போதி |
| 18 | ஆடாது அசங்காது வா | மத்யமாவதி |
| 29 | ஆடினான் விளையாடினான் | சாமா |
| | ஆடும் வரை அவர் | |

| | | |
|---|---|---|
| 25 | ஆடட்டும் | ஹுஸேனி |
| 5 | ஆருடம் ஒன்று சொல்லடி | கல்யாணி |
| 30 | ஆளாவ தென்னாளோ சிவமே | பரசு |
| 26 | ஆனந்த நர்த்தன கணபதிம் | நாட்டை |
| 32 | இப்படியும் ஓர்பிள்ளை எங்கேயும் இல்லை | ராகமாலிகை |
| 15 | இன்னமுது அன்ன உன் வண்ணமுகம் | முகாரி |
| 79 | உதஜ கோப ஸுந்தரா | உமாபரணம் |
| 34 | உருகாத மனம் என்ன மனமோ | தோடி |
| 33 | உன்னிலும் எனக்கொரு உற்றார் | ஆரபி |
| 104 | எத்தனைக் கேட்டாலும் போதும் | பைரவி |
| 35 | எந்த விதமாகிலும் | காம்போதி |

| | | |
|---|---|---|
| | நந்த முகுந்தனை | |
| 98 | எப்படித்தான் என்னுள்ளம் புகுந்து | நீலாம்பரி |
| 97 | என்னதான் இன்பம் கண்டாயோ | தேவகாந்தாரி |
| 68 | ஏகதந்த விநாயகம் பஜாமி | நாட்டை |
| 36 | ஏனிங்கே வந்து வந்திருந்து | தோடி |
| 37 | ஒய்யாரமாக ஒய்யாரமாக | சாரங்கா |
| 39 | கண்கண்ட தெய்வமே | பேகட |
| 99 | கண்களும் போதாதே | சங்கராபரணம் |
| 38 | கண்ணல்லவோ ஸ்வாமீ | சுருட்டி |
| 10 | கள்ளமே அறியாத கண்ணனை | அமிர்தவர்ஷிணி |
| 69 | கஜமுகா அனுஜம் நித்ய | கேதாரம் |

| | | |
|---|---|---|
| 40 | காணீரே | கமாஸ் |
| 49 | காளிங்க நர்த்தனம் | நாட்டை |
| 100 | குழலூதி மனமெல்லாம் | காம்போஜி |
| 64 | கொஞ்சும் மழலை பேசி | காம்போதி |
| 41 | கொடுத்து வைத்த புண்ணியவான் | நாட்டக்குறிஞ்சி |
| 73 | சதகோடி மன்மதாகார ஸரஸாங்கா | ஆனந்தபைரவி |
| 42 | செய்த தவம் என்னவோ | தேவமனோஹரி |
| 70 | சேனாபதே நமோஸ்துதே | கௌளை |
| 47 | த்யாக ராஜ பரமேசா | சக்ரவாகம் |
| 65 | த்யானமே பரம பாவனமே | ரஸமஞ்சரி |
| 44 | தவமொன்றும் அறியாத பாமரத்தி | வேளாவல்லி |
| 24 | தாசரதே எ தயாநிதே | தோடி |

| | | |
|---|---|---|
| 43 | தாயே! யசோதே! | தோடி |
| 45 | தேடி அருள வந்தான் | ஆரபி |
| 46 | தேரில் வந்தானோ (வேலன்) | ஹுஸேனி |
| 48 | தேரோடும் வீதியிலே ஈதென்ன கோலம் | நாட்டை |
| 6 | நடவர தருணி - ஸஹ ராஸ விலாஸ | கன்னட கௌள |
| 50 | நடையைப் பாரடி ஒய்யார | செஞ்சுருட்டி |
| 84 | நதஜன கல்ப வல்லி | புன்னாகவராளி |
| 51 | நல்லதல்ல வென்று சொல்லடி | சங்கராபரணம் |
| 13 | நாத்ரு தீம் ததன தொம்தனா | ஸிந்து பைரவி |
| 88 | நாம ஸுக ஸுதா பாராவாரி | ஸித்தஸேனா |
| 89 | நிரவதிக புவன ஸுந்தரா | ஹரிகாம்போஜி |
| 11 | நிருபம ஸூந்தரா கரா | பந்துவராளி |

| | | |
|---|---|---|
| 52 | நின்றிங் குன்னருள் காட்டும் | பிலஹரி |
| 23 | நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும் | ஶ்ரீரஞ்சனி |
| 7 | நீரத ஸம நீல க்ருஷ்ணா ஏஹி | ஜயந்தஶ்ரீ |
| 53 | நீலமலர் கோலத்திருமேனி | வஸந்தா |
| 20 | நீலவானம்தனில் ஒளி வீசும் | புன்னகவராளி |
| 55 | பச்சை இளம் தளிர் மேனி | சாமா |
| 95 | பத்மினி - வல்லப தேஹி | தன்யாஸி |
| 80 | பதஸேவன நிரந்தர சௌபாக்ய | தீபரம் |
| 3 | ப்ருந்தாவன் நிலயே | ரீதி கௌள |
| 54 | பழமோ பழமோ பழம் | கௌரி மனோஹரி |
| | பார்வை ஒன்று | |

| | | |
|---|---|---|
| 56 | போதுமே | சுருட்டி |
| 12 | பால ஸரஸ முரளீ | கீரவாணி |
| 57 | பால்வடியும் முகம் | நாட்டைக்குறிஞ்சி |
| 85 | புவனமோஹ ஸௌந்தர | தன்யாசி |
| 101 | மஞ்சனமாடநீ வாராய் | ரீதிகௌள |
| 4 | மதனாங்க மோஹன ஸுகுமாரனே வ்ரஜ | ஜாவளி |
| 86 | மஹா சய ஹ்ருதய கோப | ஆபோஹி |
| 1 | மாதவ பஞ்சகம் | Noinfo |
| 90 | மாதவ ஹ்ருதி கேலினி | கல்யாணி |
| 19 | முத்துக்ருஷ்ணா - மே முதம் - தேஹி | செஞ்சுருட்டி |
| 58 | முந்தி வரும் இசையிலே என் | பைரவி |
| 59 | முன் செய்த தவப்பயனே | பூபாளம் |

| | | |
|---|---|---|
| 21 | யாரென்ன சொன்னாலும் அஞ்சாத நெஞ்சமே | மணிரங்கி |
| 92 | ரகு குலோத்தம ராமா | நாகஸ்வராவளி |
| 74 | ரங்கனாதமனிசம் | நாட்டை |
| 87 | ராக ராஸானந்த நர்த்தன | ஹம்ஸ கீர்வாணி |
| 14 | ராஜ ராஜ கோபால | யதுகுல காம்போஜி |
| 78 | ராஜ ராஜேஸ்வரீ மாதங்கி | கன்னட |
| 94 | ராஜீவ நயனா | தர்பார் |
| 22 | வந்ததுவும் போனதுவும் இமைப்பொழுது | பிலஹரி |
| 105 | வந்தே நந்த ஸூனும் | கன்னடமாருவம் |
| 61 | வந்தே பிறந்தான் | மணிரங்கு |
| 60 | வர மொன்று தந்தருள் வாய் | ஷண்முகப்ரியா |
| 82 | வல்லரீ ஸமானே | மாளவி |

| | | |
|---|---|---|
| | மாதவ் | |
| 77 | வனமாலி ஸ்வாகதம் தே | நாட்டக்குறிஞ்சி |
| 62 | வாங்கும் எனக்கு இருகை | காம்போதி |
| 75 | வாஸுதேவாய நமோ நமஸ்தே | ஸஹானா |
| 102 | விடஸமவர ஜாலா மஹ*னீய கோபாலா | வஸந்தா |
| 9 | வித்தாரம் பேசி நேரம் வீணாக்காதே | காம்போஜி |
| 8 | வேணு கான ரமணா | தோடி |
| 63 | வையம் அளந்து வானளந்த | நாதநாமகரிய |
| 91 | ஜடாதர சங்கர தேவ தேவா | தோடி |
| 83 | ஜனனீ த்ரிபுர சுந்தரீ | நவரஸ கன்னட |
| 76 | ஸத்யம் பரம் தீமஹி | சங்கராபரணம் |
| 67 | ஸ்ரீ ரங்கநாத பஞ்சகம் | Noinfo |
| 2 | ஸ்ரீ விக்ன ராஜம் பஜே | கம்பீரநாட்டை |

| | | |
|---|---|---|
| 93 | ஸ்ரீசிவநாயிகே - த்ரிபுராம்பிகே | லலிதகந்தர்வம் |
| 96 | ஸ்வாகதம் க்ருஷ்ண சரணகதம் | மோஹனம் |
| 66 | ஸொகஸூகார க்ருஷ்ணன் | அடாணா |

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 1

மாதவ பஞ்சகம்

மங்கள துங்க நிரந்தர சந்த்ர துரந்தர ப்ருந்த
தராதிபதே
மாதவ கௌரவஸன மணி நூபுர மரகத ஹார
ஸஹ்ராதிபதே
அங்கித சந்தண அனுபம ஸங்குண அஞ்ஜன
ருஷித நயனபதே

ஹரி ஹரி மாதவ மது ஸூதென ஜய ஆனக
துந்துபி பாக்யப்தே 1

சங்க கதா வன மால ஸூதர்சன தாரண தருண
கரஜ்வலஸே
சல சல நயன ஸூதாகர பாஷண தந்த்ர
ஸ்வதந்த்ர ஸ்வரூபநிதே
அமர கணை ரபி வாஞ்சித பதயுக அமல
கமலதள ஸௌம்யநிதே
ஹரி ஹரி மாதவ மது ஸூதென ... பாக்யபதே 2

பத்ர விசித்ர சரித்ர பவித்ர ஸூமித்ர ஸூமித்ர
ஸூமித்ரபதே
பாலித லோக சராசர பாலன பாதயுகள
கருணாஜலதே
அகணித முனிகண கோஷண கோஷித ஹரி
ஹரி நாம ஸூதாஸயுதே
ஹரி ஹரி ................ பாக்யபதே 3

லாலன லாளித லளித விலுளித லலாட லலாமக
லஸிதபதே
நவநவ பாவமனோஹர கேத நிகேதன ஹேது

வினோத கதே
ஆனன விகஸித ஹஸன மந்தபர அகலுஷ
ஸுந்தர ரூபநிதே
ஹரி ஹரி .. .. .. .. .. பாக்யபதே 4

ரம்ய ஸௌகந்த மதுகர மதுகமத ராக மபாத
மபாதபமா
நாததகீதபர சஞ்சர யுதவன நானாவிததள
ஹாரபதே
அமிதரமித கன கோலாஹல சிகி அர்ப்பித
பிஞ்சல சிகுரபதே
ஹரி ஹரி .. .. .. .. .. பாக்யதே 5

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 2

ராகம் - கம்பீரநாட்டை
தாளம் - கண்டம்

பல்லவி

ஸ்ரீ விக்ன ராஜம் பஜே
ஸந்த தமஹம் குஜ்ஜர முகம் சங்கர ஸுதம்
தமிஹ (ஸ்ரீ)
ஸந்த தமஹம் தந்தி ஸுந்தர முகம் அந்த காந்தக
ஸுதம் தமிஹ (ஸ்ரீ)

அனுபல்லவி

ஸேவித ஸுரேந்த்ர மஹனீய குண சீலம்
ஜபதப ஸமாதி ஸுக வாத அனு கூலம்
யாவித ஸுர முனிகண பக்த பரிபாலம்
பயங்கர விஷங்க மாதாங்க குல காலம் (ஸ்ரீ)

சரணம்

கனக கேயூர ஹாராவளி கலித கம்பீர கௌரகிரி
சோபம் ஸுசோபம்
காமாதி பயபரித மூட மத கலிகலுவு கண்டித
மகண்ட ப்ரதாபம்
ஸனக ஸுக நாரத பதஞ்சலி பராசர மதங்க

முனி ஸங்க ஸ்ல்லாபம்
னத்யபர மப்ஜ நயனப் ரமுத முக்திகர தத்வமஸி
நித்ய நிகமாதி ஸ்வரூபம் (ஸ்ரீ)

---



பாடல் 3

ராகம்: ரீதி கௌள
தாளம்: ஆதி

பல்லவி

ப்ருந்தாவன் நிலயே--ரா...தே
ப்ருந்த ஹாரதர க்ருஷ்ண மனோஹரி -
நிந்திதேந்து முகபிம்ப கலாதரி (ப்ரு)

ஸமஷ்டி சரணம்

ச்ருங்கார ரஸோல்லாஸ-சதுரே-ஸ்ரீ

ரங்க க்ருஷ்ண வதனாம்புஜ மதுபே-
ராஸமண்டல மத்யே அதி தேஜ மங்கள நித்யே
ரதி
கோடி ஸுந்தர சித்ரே நந்த கோப குமார சரித்ரே
ஜனித மகரந்த ஸுகந்த பரிமள குஸுமாகர
லலிதே வஸு
தேவ தேவகி நந்த முகுந்த கோவிந்த காளிங்க
நர்த்தன ரஸிகே
தக்கிட தத்திமி தத்திரி தஜ்ஜணு தாம் ஸாநித
மகாரிஸநி
தக்கிட தத்திமி தத்திரி தஜ்ஜணு தாம் கிடதொம்
தீங்கிணதொம் த
தீங்கிணதொம் தாம் தீங் ...... கிண தொம்தாம்
...... தா
ஆம்...தீங்கிணதொம் தாம் தா ... ம் தீங்-கி ......

ணதொம். தாம் தீங்கிணதொம் தாம் - தாம்
தீங்கிண தொம் தாம், தாம் தீ
கிணதோம் ததஜுனு தஜுனு ததிங்கிணதோம்
தக ததிங்கிணதோம் தகதிக தகதிக
ததிங்கிணதோம் ...
தாம் - ககம ரீ - கம - ஸரிகம நிதி ஸகரிமநி

நிஸ்ஸ நீஸஸரி ..
ஸா; கிணதொம் திகிணதொம் - ததிகிணதொம் தகதிதி
கிணதொம் - தகதிகததிகிணதோம்

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 4

ராகம்: ஜாவளி
தாளம்: ஆதி

பல்லவி

மதனாங்க மோஹன ஸுகுமாரனே வ்ரஜ வனிதையர் உள்ளம் மகிழும் வாஸுதேவனே (ம)

அனுபல்லவி

ததனீ பாதா னிஸ்னீ த ப மா -
தருணப் பாதா னிஸ்னீ ... த ப மா
தாதநி தநிபாத னிஸ் னிஸ் னீத பமா (ம)
தாமரை மலர்ப்பாதா னிஸ னிஸ னீத பமா
(செந்)
தாமரை மலர்ப்பாதா னிஸ னிஸ னீத கமபதநிஸ்
ராதேய வைரி ஜாயா சோதர ராதிகா காந்த நந்த
கோவிந்த (ம)
சரணம்

எத்தனை நேரம் நான் பாடுவேன் உன்
இன்னிசையங்குழல் வேணுகானத்தில்
தகிடதீம் கிணதொம் தகிட ததிங் கிண தொம்
என
எத்தனை நேரம் நான் ஆடுவேன் --

இங்கு நந்தகுமாரனின் கானத்துக்கு இசைந்த
படியும் ஆடி வச்சாச்சு --
அங்கு என் மாமியார் நாத்தனார் சொல்படி
ஆடவேணும் இது பாடாகப் போச்சு --

பாடல் 5

ராகம்: கல்யாணி
தாளம்: ஆதி

பல்லவி

ஆருடம் ஒன்று சொல்லடி -- என்
அந்தரங்க சிந்தையுடன் வந்து உறவாடின
நந்த முகுந்தன் எந்த நாளும் அகலாதிருக்க (அ)

அனுபல்லவி

பாரோடு விண்ணாகப் பரந்திருந்தானே
பச்சைப் பிள்ளைத் தனம் போக வில்லையே
மானே
ஆரோடு சொல்வேனோ அந்தரங்கம் தானே
அந்தரங்கம் ஆனாலும் சிந்தை நாணம் தானே

(மத்யமகாலம்)
அலைந்து வெண்ணை திருட அதிலென்ன இருக்கோ
அத்தைமகன் மேலேயும் இவனுக்கென்ன வெறுப்போ
ஒரு பிடி அவலுக்கு உலகம்தான் கணக்கோ
உள்ளதைச் சொல்லப் போனால் உனக்கென்ன சிரிப்போ. (ஆ)

சரணம்

அச்சம் இல்லாமல் அரவமேலே நின்றாடுவான்
ஆரும் அழைக்க வந்தால் அவர் பின்னே ஓடுவான்
மிச்சம் மீதி இல்லாது வெண்ணைகளவாடுவான்
வேண்டாமே கண்ணா என்றால் வேணவழக்காடுவான். (ஆ)

(சிட்டைஸ்வரம்) ஸ்வரப்படுத்திய பாட்டோடு இணைந்துள்ளது.

பாடல் 6

ராகம்: கன்னட கௌள
தாளம்: ஆதி

பல்லவி

நடவர தருணி - ஸஹ ராஸ விலாஸ
நவ நவமணி கண விரசித மகுட தரண ம்ருதுள
சரண (ந)

அனுபல்லவி

கிடஜம் தரிகிடதீம் தரிதாம் - தக திக தோம்
தககிமி நந்த ஸூநந்தன தர மந்தர கிரிஸூந்தர
(ந)

சரணம் (சதுச்ரகதி)

ஸுலலித வபுஷ முகாம் புஜ பரி விகலன் முக்த கீதாம்ருத ரஸிகா
ஜலத படல கன சலஸம கோமள குஸும தள களப சரீரா
ஸுலப ஸம நடன வ்ரஜயுவதீ ஜன ஸுமன ரமித கம்பீரா
ஹலதர ஸோதர ஹரே முரளிதர - அதி கருணாகர. (ந)

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 7

ராகம்: ஜயந்தஸ்ரீ
தாளம்: ஆதி

பல்லவி (திச்ரகதி)

நீரத ஸம நீல க்ருஷ்ணா ஏஹி--மாம் பாஹி
நிக மாகம வினுதா - பவ பயஹரண சரிதா - ஜய

அனுபல்லவி

நரவர ஸ்துதி ரூப வேஷ நவ வ்ரஜ யுவதீ
ஸமேத
நாதிரு ததிங்கிணதோம் தித்தாம் கிடதகரிகிட
நாதிரு ததிங்கிணதோம் தித்தாம் கிடதக தரிகிட
(நீ)

சரணம் கண்டகதி

மகர குண்டல தரித மஹனீய வேஷா
ஸகல ஜன முனிகண ஸமூஹ மன மோஹா
தரகடக கரதல ஜலஜ்வலித ஜாலா
தக தகிட ததிங்கிணதொம் தித்தாம்
ஸாஸா மதனிஸாஸா கமத னினி - ஸகமபாபா
மதானிஸ்க்
தக்கு தின்னம் தரிகு தரிகிடகு குகுதத்தி
குகுதணரு
டிண்டிங்கு டிகுணகுகு கிடதகதரிகிடதொம். (நீ)

---

## பாடல் 8

ராகம்: தோடி
தாளம்: மி.சாபு

பல்லவி
வேணு கான ரமணா அதி
விதரண குண நிபுண (வே)

அனுபல்லவி

சாணூர முர மத ஹர நந்த நந்தனா
ஸௌவர்ண லோல குண்டல த்யுதி வதனா
(வே)

சரணம்

காருண்ய கோமள ச்யாமள நயனா
காளிந்தி தட ரூட பல்லவ நயனா

சாரு கலாப ராஜித ஜித மதனா
ஸௌரப வலயித வனமாலிகா பரணா (வே)

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 9

ராகம் : காம்போஜி
தாளம் : மி.சாபு

பல்லவி

வித்தாரம் பேசி நேரம் வீணாக்காதே - மானே என்னைச்
சற்றாகிலும் விடடி மா...னே. உனக்கு நான்
தண்டம் நூறுகோடி செய்வேனே (வித்)

அனுபல்லவி

முத்தார மணி ஆட முந்தி விழிகளாட

மோ.ன.குழல் ஊதுறா...னே
எத்தாலும் அடிமைகொள். இன்னிசை உன்
காதில்
ஏறாத தென்னவோ அறியேனே
தத்தா கிட தகஜம் பத ஸ்ஸ்ஸ நிபதா ; பாதா
ஸா; நீதா; ;; ;; ;ஸா நீதா ;;; ; நீதா, தா . மா பா
;;;; பா தா
த்ருகண தொம்க தகதின தாக்ததின தகஜணுதக
திரதாம் பத
கிடத தரிமித டிடிகுணகு தக கிடத தரிமித
தஜணுதாம் பத
நாத்ருதக தில்லான த்ருகதனா பத திரிகிடதக
தில்லான த்ருகதனா அந்த
நாரத மாமுனி இங்கித மறிந்த வண்ணமோ ... ...
... பத
நாத்ருதக தில்லான த்ருகதனா பத திரிகிட தக
தில்லான த்ருகதனா அத
னாலிதனாலும் அராதடி மறுபடி உனக்கொரு
கோடி நமஸ்காரமடி.

சரணம்

கை வேலை துறந்தோடி ... ... கறவைகள் மறந்தோடி
கவலையை காவலை தெறிந்தோடி வ ந் தனே
வைவார் என் மாமியார் நாத்தியார் எல்லோரும் அந்த
வழக்கினுக் கஞ்சாது வந்தேனே ... ...
மெய்யாய் விடடி என்ன வேண்டிக் கிடக்கு வாதம்
மேனி உருகுதடி வேணு முரளீ கீதம்
தையலார் திலகமே ... சற்றே விடடீ போதும்
ஸங்கீதத்துக்கும் உனக்கும் சரியாய் ஆயிரம் காதம்
(தத்தாகிட தகஜம் ... ... ... கோடி நமஸ்காரமடி
(தத்தாகிட ---------------- நமஸ்காரமடி) வித்

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

## பாடல் 10

ராகம் - ஹம்ஸநாதம்

தாளம் - ஆதி (2 கிளை)

பல்லவி

கல்யாண . ராமா ரகு ராம ராமா -
கனக மகுட மரகத மணி லோல ஹார தசரத பால
ஸீதா - (க)

அனுபல்லவி

மல்லிகாதி ஸுகந்த மய நவ
மாலிகாதி சோபித களேன
உல்லாச பரி சீலன சாமர
உபய பார்ச்வேன குண்டல கேலன: (க)

சரணம்

1. ஆகத ஸுரவர முனிகண ஸஜ்ஜன அகணித
ஜனகன கோஷித மங்கள
ராகவராம ரகுராம ராம ஜனகஜா ரமண
மனோஹர ஸீதா, (க)

2. கௌதம வஸிஷ்ட நாரத தும்புரு காச்யபாதி முனி கண வர பூஜித
ஔபவாஹய ஸ்கந்த தேச அலங்க்ருத ஹைம ஸிம்ஹா ஸனஸ்தித ஸீதா- (க)

3. பாகதேய பஹுமான ஸஹாய உபதார்ப்பித திசி திசி ரஷகவர
மேகவாஹ நரவாஹனாதினுத ஏகராஜ மஹாராஜ மமராஜ (க)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 11

ராகம் - பந்துவராளி
தாளம் - ஆதி

பல்லவி

நிருபம ஸுந்தரா கரா

அதி நிருபம ஸுந்தராகரா-நிசய குமுத
ஹித நீல மேக ச்யாம சரீரா..... (அதி)

அனுபல்லவி

ஸுருசிர நவரத்ன கோடி - துளஸீ வன மாலி
காதி
ஸுந்தர தர மமவிஹாரி- ஸுர முனிகண மன
ஸஞ்சாரி (அ)

சரணம்

ராதிகா குஸும நந்தினி வலித ராஜினி ரஜித
ரமணி மனோஹரி
சாருனி சம்பக வல்லி மல்லிகா ஸரஸி ஸுருசி
நவ வ்ரஜயுவதீ ஜன
ராஸ களேபர மண்டல சித்ரா நகநகமணி கண
ஜ்வலித விசித்ரா
போக ஸமநடன புளகஸு காத்ரா புவன ஸகல
ஸ்தித பூஸுர மித்ரா. (அ)
(நிருபம ஸுந்தராகரா)

சரணம் (சதுஸ்ர கதி)

பாதபா பபத பாதபா பபத கமகாகமரி ஸரிகம பாதப
ராதிகாகுஸும நந்தினி லலித ராஜினி ரஜித ரமணி மனோஹரி
பாதநிஸ்ரிஸ் ஸா ரி ஸா ரி ஸா ஸ்ஸ்ரி ஸ்ஸ்ரி ஸ்நி மபதநி ஸாஸ்ஸ்
சாருனி சம் பக வல்லிமல்லிகா ஸரஸி ஸுருசிநவ வ்ரஜயுவதீஜன
ஸாரிக் மாமம் க்ரிஸ்நிஸ்நி ஸ்ரிகர் க்ரிக்ரி ஸ்ரிஸ்ஸ் ஸ்நிநநி ஸாஸ்ஸ்
ராஸக ளேபர மண்டல சித்ரா... நகநக மணிகண ஜ்வலித விசித்ரா
ஸாரிக் ம்ம்ம்ம் க்ரிஸ்நி ஸாஸ்ஸ் நிஸ்நி தநிதபம கமபமகமரீ
போக ஸம நடன புளக ஸுகா த்ரா புவன ஸகலஸ்தித பூஸுரமித்ரா

---

## பாடல் 12

ராகம் - கீரவாணி
தாளம் - ஆதி

பல்லவி

பால ஸரஸ முரளீ - ஸுதாரஸ
பாவ மதுர லஹரீ - விஹார கோ (பால)

அனுபல்லவி

நீல நளின ருசிர தள லோசன
நிகம ஸார ம்ருது வசன ஜிதமதன (பால)

சரணம்

1. கோ...லாஹல நடன பதாம் புஜகர கிங்கிணி
ரவ
தான கண கண ஜால வ்ரஜலோல மதுகால

கனகதுகூல கோ (பால)

2. நிரவதி ரம்ய ஸ்மேரமுகாம் புஜ குஸுமித
கல் ஹாரதள லோசன கோ (பால)

3. கமணீய அதி தேஜஸ்தடாக கேலித மகர
கணஇவ கபிவ்ருத
கோபவதூஜன ரமண மனோஹர ராஸ விஹார
தமால ஸுமால கோ (பால)

4. ஸஜ்ஜன முனிகண ஸுரஸன்னுத
கோவர்த்தன கிரிதர சிசிரபுவனபத
நர்த்தன மணிகண கிரண ஜ்வலித மய குண்டல
மண்டித கண்டவுதாரகோ (பால)

5. வல்லவீரதிகலஹலோதர மதுர மனோஹர
சிகண்டகஜால
ம்ருக கண வைரிஸுநக கண பூஷண ம்ருகமத
திலக ஸமுஜ்வல பால
அகணித மணிகன ப்ரவர விரசித கடகதர கரதல
முகுர கபோல
த்வத்தர மதுருசித கலித லலிதா ஹத ப்ரத்யாகத

மயஸ்வரஜ் ஜால (பால)

6. ஸுரவந்தித மதுராபுரி ஸதனா
ஸரோருஹவதன ஸுந்தரமன
கலித கலாப சிகுரா பத நயன ருசிர கனக வஸன
ரர்தாரமணா
மந்தார வனமால தராயத ஸுந்தர பரிமள
குஸுமெ ஸுகேச
ஸந்தத மனு சிந்தித மமஹருதய ஸரோஜமதுப
காளிங்கநடன கோ (பால)

ஹே - தயாகர ஸாகர ரூபா ஹிமகர லீக்ஷண
ஸ்ருத ஸுந்தாபா
மாதவ கோடி தினகர சோபா மமஹருதய நடன
மகுட கலாப கோ (பால)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 13

ராகம் - ஸிந்து பைரவி
தாளம் - ஆதி

பல்லவி

நாத்ரு தீம் ததன தொம்தனா

அனுபல்லவி

நாத்ருதீம் ததன தொம்தனா
நாகபண நர்த்தனா
நாதரி தீம்தக தொம்தரி தீம்தக நகுந்தரக
தில்லானா
தில்லானா நகுந்தரக நகுந்தரக தில்லானா
தில்லானா ததீங்கிணதொம்

சரணம்

கானநாரத மனோரதானுபவ
கைவல்ய விதரணதனா
கம்பீர நினதாங்கிரி ஸரோருஹ
கனக ஸிஞ்சித மணிகணா

தான தான திருதான தனதனத
தனத னத தனதனா
ஆஸாதித புஜகராஜ காளீய
அமித பாக்ய விதரண தனா
நாதரி … … … … … … த்தீங்கிணதொம்

அனுபல்லவியில் உள்ளதைப்போல்
பாடவேண்டும்.

---

[தலை ](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

## பாடல் 14

ராகம் : யதுகுல காம்போஜி
தாளம் : க. சாபு

பல்லவி

ராஜ ராஜ கோபால
நந்த யசோத பால

ராஜ கோபால நவனீத லீலா
ப்ரதி ஜாகர--

அனுபல்லவி

ஸஜ் ஜனாவன நிபுண
ஸரஸ மதுரானன ஶ்ரீ--

சரணம்

நீலமய மணிஹார நிருபமஸ்ரீ குணஸார
பால நிகிலாதார பத்ம ஸௌரப ஹார
ஜால ஜலதாகார சரதிந்து முக கம்பீர
சம்பகவன ஹரித்ரா - தடவிஹார ஜார சோர--

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 15

ராகம்: முகாரி

தாளம்: ஆதி

பல்லவி

இன்னமுது அன்ன உன் வண்ணமுகம் கண்டு
சொன்னபடி யாடுது மனமே - இங்கு
துள்ளித் துள்ளிப்பாடுது முன்னமே

அனுபல்லவி

பின்னலும் சாயக் கொண்டையும் சூழ மயில்
பீலிஒன்று நிரந்தரம் வாழ
மின்னலொளி கடைக் கண்ணில் தாழ - நீல
மேனிமுழுதான வனமலர் மாலைகள் மிருந்து
தாழ கடைதலிராத (இ)

சரணம்

மெய்யுணர்ந்த மறைமாதவர் ஆனவர்
மெய்ப்பொருள் இதென்று உனைநாட -- நீல
மேனிபடும் சுதமானதை ஒரு ஆவினம்
மிக்க அருகில் அணைந்து கூட

ஐயன் உன் முக வண்ணனை ஆராரோ சொல்லக் கேட்டு
அரம்பையர்கள் மண்ணுலகம் நாட -
அருந்ததியும் கூட தன்னிலை இழந்து
ஆவட்டமிட தூது - பா - ட ... ... ...

மத்யமகாலம்

அதிலுமிதுவென்று தகுதிமியெனவொரு ஆடக மயில் நடமாட
அங்கிங் கெனாது தங்கி உறவாடும் தென்றலும் வந்து குழல் கூட
பொதுவில் நடமாடும் புனத நற் சுடலை பூத்துக் குலுங்கி வனமாக
பொங்கு கடலரவு மலையென இலாது பொரும் எனாது ஒருபோதும் கடையாத (இ)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 16

ராகம் :- அமிர்தவர்ஷிணி
தாளம் :- ஆதி

பல்லவி

கள்ளமே அறியா - த - கண்ணனை
கானக்குழல் எதிரொலி மாதுளப
கானத்திடையுலவு நீல ஒளிதனைக்
கண்டபடி சொல்லப் போகாதே - அது அந்தரங்க
மாகவும் ஆகாதே.

அனுபல்லவி

மெள்ள மறைபாடும் தேவனை......... வேணது
தரும் கற்பக கா...வி...னை..
தெவள்வே குழலூதும் தேவாதி தேவனை
மெள்ள மனைசென்று உள்ளதயிர்கண்டு
அள்ளிமிகவுண்ட கள்ளத்தனமன்றி (க)

சரணம்

தென்றல் ஊறவரும் சின்னக் குழலிசையில்
சிந்தை வழி…கா…ட்ட சென்றோமே அங்கு
நின்ற அழகினிலே நெஞ்சாரத் தந்திங்கு
சிந்தைகவர்கள்வன் என்றோமே.
கன்றோடு பசுவெல்லாம் காக்கும் அருளாளன்
கருணையினால் வந்த தென்றோ…மே…

கைக்கொள்ளும் வெண்ணையுண்ட கருணையை மனமார
    கள்ளம் கள்ளம் கள்ளம் என்றோமே.
தொன்று முதல் வந்த தொரு கோடிபிறவி
    தூயதென வாக ஆனதே
சொல்லழகிலும் பண்ணழகிலுமாக
    சொன்னதொரு உறவும் ஆனதே
கதியெனவானதும் துதியெனவானதும்
    காளீய நடனமும் ஆனதே
கண்கண்ட தெய்வம் பண்கொண்ட தெய்வம்
    கைகொண்ட வெண்ணை அது உண்டதன்றி
(க)

# பாடல் 17

ராகம்: கானடா
தாளம்: ஆதி

## பல்லவி

அலைபாயுதே--கண்ணா! என்மனம் மிக
அலைபாயுதே--உன் ஆனந்த மோஹன
வேணுகானமதில்

## அனுபல்லவி

நிலைபெயராது சிலைபோல நின்ற
நேரமாவதறியாமலே மிக விநோதமான
முரளீதராமனம் (அ)

## சரணம்

தெளிநத நிலவு பட்டப்பகல்போல் எரியுதே--

உன்
திக்கை நோக்கி என்னிரு புருவம் நெரியுதே
கனிந்த உன் வேணுகானம் காற்றில் வருகுதே
கண்கள் சொருகி ஒரு விதமாய் வருகுதே

கதித்த மனத்தில் உறுத்தி பதத்தை எனக்கு
அளித்து மகிழ்த்தவா--ஒரு
தனித்த வனத்தில் அணைத்து எனக்கு உணர்ச்சி
கொடுத்து முகிழ்த்தவா
கனைகடலலையினில் கதிரவன் ஒளியென
இணையிருக் கழலெனக் கனித்தவா
கதறிமனமுருக நானழைக்கவோ இதர
மாதருடன் நீ களிக்கவோ
இது தகுமோ - இது முறையோ - இது தருமம்
தானோ
குழலூதிடும் பொழுது ஆடிடும் குழைகள்
போலவே மனது வேதனை மிகவொடு (அ)

---

பாடல் 18

ராகம் - மத்யமாவதி
தாளம் - ஆதி

பல்லவி

ஆடாது அசங்காது வா, கண்ணா உன்
ஆடலில் ஈரேழு புவனமும் அசைந்து
அசைந்தாடு எனவே (ஆடாது)

அனுபல்லவி

ஆடலைக் காணதில்லை - அம்பலத்திறைவனும்
தன்
ஆடலை விட்டு இங்கே கோகுலம் வந்தான்
ஆதலினால் சிறுயாதவனே - ஒரு
மாமயிலிறகணி மாதவனே நீ (ஆடாது)

சரணம்

சின்னம் சிறு பதங்கள் சிலம் பொலித்திடுமே

அதை
செவிமடுத்த பிறவி மனம் களித்திடுமே
பின்னிய சடை சற்றே வகை கலைந்திடுமே -
மயில்
பீலி அசைந்தசைந்து நிலைகலைந்திடுமே
பன்னிருகை யிறைவன் ஏறுமயில் ஒன்று - தன்
பசுந்தோகை விரிந்தாடி பரிசளித்திடுமே - குழல்
பாடிவரும் அழகா - உனைக் காணவரும்
அடியார் எவராயினும்
கனகமணி அசையும் உனது திருநடனம்
கண்பட்டுப் போனால் மனம் புண்பட்டுப்
போகுமே (ஆடாது)

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 19

ராகம்:-செஞ்சுருட்டி
தாளம்:-ஆதி

பல்லவி

முத்துக்ருஷ்ணா - மே முதம் - தேஹி
முகுந்த மாதவ ராஸ விலாஸ களேபர மண்டல
(மு)

அனுபல்லவி

நித்ய யௌவனா அலங்க்ருதாகார --
நீ-ல-மே-க கோமளாங்க சரீர நவ

னீத சோர மஹனீயரூப ராதாவிலோ தர
வேணுகான கோ
பாலா வர பா-லா-அகணித விதரண குண சீலா -
நித்
தரிகு தரிகு தக ததிங்கிணதோம் தக
ததிங்கிணதோம்
தககதிகததககதிக ததிங்கிணதோம் கம

பநிதபா - த மதபமகரி ஸரிகமபா - ததாம் ததீம் -
தணம் த
கும்-ததாம்ததீம், தணம் தகும் - ததாம் ததீம்தணம்

தகும்
    தக்கிடதமி தரிகிடதிமி தளாங்குதகஜம் திரி

தக்கிடதிமி தரிகிடதிமி தளாங்கு தகஜம்
திரிதக்கிடதிமி தரிடகிதிமி
    தளாங்கு தகஜனு தளாங்கு தகஜனு காளிங்க
நர்த்தன-

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 20

ராகம்: புன்னகவராளி
தாளம்: ஆதி

பல்லவி

நீலவானம்தனில் ஒளி வீசும் -
நிறைமதியோ உன் முகமே - கண்ணா (நீ)

அனுபல்லவி

கோல வண்ணம் காட்டி - குழலிசையைக் கூட்டி
மோன நிலையில் எம்மை - ஆட்டி வைத்த
எங்கள்

இறைவா! என் மனமதிலே நிறைவாகி
ஒளிமிளிர இன்பம் தர வந்
தவனே ப்ருந்தாவனம் நின்றவனே -
காளிங்கனை வென்றவ -
னே-தித்தஜம் தஜம் தரி தாம் - தித் தஜம் தஜம்
தரி தாம் - த
தாகிட குந்தரி - தரிஜகணம்தரி - ததீங்கிணதொம்
- நீதாபதம மகாரிஸநி

சரணம்

நதிக்கரை ஓரத்திலே - யமுனை
நதிக்கரை ஓரத்திலே - அன்று ஒரு -
நாள் இந்நேரத்திலே - அன்
றலர்ந்த நறுமணமலரோ - மலரிதழோ உன்
மதிமுகமென்றதும்

மதிமயங்கி வசமிழந்த என்னிடம் மனமிறங்கி
அருள் புரிந்து சென்றதும்
மறவேனே - கணம் தரியேனே - தித்
தரிகுத ரிகுதீம் தததரிதீமித ஜணுத ஜணுததிம்
தகததிங்கிணதொம் தத்தித்
தகதணக ஜம்தரி தித்தகணகஜம்தரி -
தகணகஜம்தரி களங்கமிலா - த (நீ)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 21

ராகம்: மணிரங்கி
தாளம்: ஆதி

பல்லவி

யாரென்ன சொன்னாலும் அஞ்சாத நெஞ்சமே
ஐயன் கருணையைப் பாடு - ராக
ஆலாபனமுடனும் பாடு - முடிந்தால்

அடவோடும் ஜதியோடும் ஆடு -
அருமையென வந்தப் பிறவிகளோ - பல
ஆயிரம் தந்தாலும் வருமோ ஆதலின் (ஆ)

அனுபல்லவி

நாரத நாதமும் வேதமும் நாண
நாணக் குழல் ஒன்று ஊதுவான்
நீரதக் கழல் ஆட - கோபியரும் பாட
நேர் நேர் எனச் சொல்லி - தானாடுவான் அந்த
(ஐ)

சரணம்

தோலை யறிந்து கனி தூர எறிந்து
வெறுந் தோலைத் துணிந்தொருவன்
தந்தானல்லவோ -
மேலைப்பிடி அவலை - வேணுமென்றே
தெரிந்து
விரும்பி ஒருவன் அன்று தந்தானல்லவோ -
காலமெல்லாம் தவம் இருந்து கனிந்து கனி -
கடித்து சுவைத்தொருவள் தந்தாளல்லவோ -

இந்த
ஞாலமும் ஆயிரம் சொன்னாலும் நாம் அதை
நமக் கெதற்கு என்று தள்ளி - நாமமும் ஆயிரம்
சொல்லிச் சொல்லி (ஐ)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 22

ராஹம்: பிலஹரி
தாளம்: கண்டசாபு

பல்லவி

வந்ததுவும் போனதுவும் இமைப்பொழுது
ஆனாலும்
மனமன்றோ களவானதே தயிரொடு நவனீதம்
களவிட (வ)

அனுபல்லவி

நந்தகோபன் செய்ததவம் நல்வதொரு பயனாகி
இந்த விதமாக வந்து இன்பமுழுக் காட்டுதடி
(வ)

சரணம்

காலினில் வழிந்த தயிர் கமலமலர்க் கோலமிட
கையில் வழி வாரும் வெண்ணைக் கானக் குழல்
மூடியிட
நீலவண்ணக் கண்ணனிவன் நெட்டுமிழ்த்த
தமுதாகி
நெஞ்சமெல்லாம் பொங்கி அவன் நினைவாலே
ஆடலிட (வ)

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 23

ராகம்:- ஸ்ரீரஞ்சனி

தாளம்:- ஆதி

பல்லவி

நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும் எங்கள்
நீல நிறமேனி மாதவன் செய்வது
நிமிஷம் போவது யுகமாய் ஆகுது

அனுபல்லவி

காதாரக் குழலூதி கன்றோடு விளையாடி
கண்முன்னே வந்து நின்று ஆட்டமும் ஆடி
ஏதேதோ ஜாலங்கள் செய்வதும் ஓடி ஓடி
எழிலுறு மங்கையர் மனைதொறும் புகுந்து
களவாடிடும் எனதாருயிர் மகனை (நீ)

சரணம்

செய்யும் துஷ்டத்தனத்திற்கு எல்லையே இல்லை
தேடிப் பிடிக்க என்றால் சக்தியும் இல்லை
கையும் களவுமாக்க காலமும் வல்லை -
காலம் தவறாது கோள் சொல்ல வந்து நின்ற

மாதர்க்கு விடை சொல்ல நேரமுமில்லை (நீ)

கட்ட எண்ணிக் கயிற்றைத் தேடியும் காணோம்
கைக்கான கயிறெல்லாம் அளவாகக் காணோம்
மட்டமென உரலொடு கட்டிடத் தோணும்
ஆனால்
மட மட வெனும் ஒலி செவிபுக வந்தால்
மருத மரமிரண்டைக் காணவே காணோம் (நீ)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 24

ராகம்:- தோடி
தாளம்:- ஆதி

பல்லவி

தாசரதே - தயாநிதே -
தாமரஸ தளநயன ஸீதாபதே ரகுபதே (தா)

அனுபல்லவி

வாஸவாரி ஜித வந்த்யபதே
வாரிதி ஸேவித வாரிஜ பாதபதே
வர நிந்தித சுந்தர குந்தரதன
மணி மண்டித காஞ்சன மகுடதரண
கரவிலஸித கோதண்ட விதரண
களஸம்யத தூணி மனோரமண வர (தா)

சரணம்

அத்ரி பரத்வாஜ கும்பஜ முனிகண
ஆராதித மங்கள ரூபா
ஆனத மோத சபரீ தீய மானானந்த
பல புக்த கனாபா...
சித்ர கூட சிகரே கமனவர
திவ்ய ரூப கரசர சாபா
தினகர குல மஹாசய தரசந்த்ர தேஜோமய
புஷ்பக ஸம்ய மீந்த்ர
தன தார்ப்பித ரத மந்திர ஸௌந்தர
தரணி ஜாமனோரமண ஸ்ரீராம சந்த்ர (தா)

பாடல் 25

ராகம்:- ஹுஸேனி
தாளம்:- ரூபகம்

பல்லவி

ஆடும் வரை அவர் ஆடட்டும்
அறிந்து கொண்டேனடி......மயங்கேனடி
குறையேனடி

அனுபல்லவி

தேடும் வரை எனைத் தேடட்டும்
தெறிவிக்காதேயடி இடத்தை மட்டும்
ஏற்றமட்டும் (ஆ)

சரணம்

இங்கித மென்றாலே வீசை என்ன விலை
என்று கேட்பாரந்த மன்னன் - அதை
எடுத்துச் சொல்லவந்து நின்றாயே பெண்ணே நீ
ஏற்குமோடி எந்தன் எண்ணம்
ஸங்கீதம் அவர் கையில் கோயிற் குரங்காக
தவிக்குதே என் சொல்ல இன்னும
ஸரளி வரிசை முரளிக்காச்சு
ஜண்டை வரிசை கொண்டைக் காச்சு
அலங்கார பாம்பு மேலே
ஆடியாச்சு பாடியாச்சு

காவடிச்சிந்து

மாஞ்சி

1) கண்ணன் வருகின்ற நேரம் - கரையோரம்
தென்றல் கண்டு கொழித்தது பாரும்
கானத்திடை மோனக்குயில்
ஓசைக்கிடையானத்தரம்
ஆனக் குழலிசைக் கேளும் - போன

ஆவியெல்லாம் கூட மீளும்.

2)
சல்லச் சலனமிட்டோடும் நதி பாடும்
வனம் தங்கித் தங்கி சுழன்றாடும் - நல்ல
துதிபாடிடும் அடியாரவர் மனமானது
இதுபோல்என
துள்ளித் துள்ளிக் குதித்தோடும் - புகழ்ச்
சொல்லிச் சொல்லி இசைபாடும்.

3)
கண்ணன் நகைபோலும் முல்லை இணை
இல்லை
என்று கண்டதும் வண்டொன்றும் வல்லை - இது
கனவோ அல நனவோ என கருதாதிரு மனமே
ஒரு காலமும் பொய்யொன்றும் சொல்லேன்
எங்கள் கண்ணனன்றி வேறு இல்லேன்.

4)
தாழைமடல் நீத்து நோக்கும் முல்லைப் பார்க்கும்
என்ன சௌக்கியமோ என்று கேட்கும் - அட
மொழிபேசிட இதுவோபொழுதெனவோ அதோ

வரும் மாதவன்
முத்து முடியினில் சேர்வோம் அங்கே
மெத்த மெத்தப் பேசி நேர்வோம்.

சரணம்

பா பா - பா பா - பா பா மாத ப - பமகரி - கஸரீ
இங்கி - த மென் - றா லே வீசை - என்ன .- வி.லை
ரிக மாபம - காரீ - காரீ ஸா; - ஸா; - ஸா ஸா
என் . று ..- கேட் பா ரந்த மன் -- னன் .- அதை
ஸஸ பா - பா பா - பநிதா மா தநி - ஸர்ரிஸ் நீதா பா; பாநித - மா
எடுத் துச் - சொல்ல - வந் .- து நின் .- றா .. யே - பெண்.ணே...நீ
பா பா - பாமா - காரீ பம கரீம கரி ஸா ;; ||
ஏற் கு - மோடி - எந்தன் எண் . .. ணம் ... .... . ||
பா பா - பா ப ப - பாநித தம நிதநீ - ஸாஸா - ஸா ஸா

சங்கீ - தம் அவர் - கை ... யில் கோ.விற் - குரங் - காக

ஸ்ரி .ரீபம க்ரி ஸா - ஸாஸா தாரிஸ் நித - ஸா :-;; ||

தவிக்கு ... தே . என் - சொல்ல இன் ... ... னும் .-... ||

ரிரிரிரி - க்ரி ஸ்க்ரி ஸர்ஸ் ஸா ஸ் நி தி - ஸா ஸ் ஸா ஸ்

சரளிவ ரிசை முரளிக் காச்சு ஜண்டைவரிசை- கொண்டைக் காச்சு

பபாபா க்ரி ஸா ஸ் பா ப பா ப பதம - மபம - காரி ||

அலங்கா ர - பாம்பு மேலே ஆடி யாச்.சு பாடி - யாச்சு || (ஆடும்)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 26

ராகம்: நாட்டை

தாளம்: ஆதி
ஆரோகணம் - ஸரீகமபநிபதநிஸ்
அவரோகணம் - ஸநிபமரிஸ

பல்லவி

ஆனந்த நர்த்தன கணபதிம் பாவயே -
சிதாகார மூலாதார ஓம்கார கஜவதனம் பரமம்
பரம் (ஆ)

அனுபல்லவி

ஸானந்த முனீந்த்ர கணநுத சிவ சங்கர மானஸ
நிலீனமானம்
தந்த்ரீலய ஸமன்வித கந்தர்வ சாரண
வரானுகீயமானம்
தீனஜனமந்தாரமனுபம திவ்ய களேபர
சோபாயமானம்
பாஸமானம் அஸமானம் பஜமானம்
பக்தஜனஸம்மானம்
பாமக மாகஸ ஸாஸரிஸா - தகதணகு திமித
கிடதணங்கு தக

தீமித தீமித தாம் தை... ய...... தாம்....
தாம் தணந்தரி தாம். தக ஜணம்தணந்தரி.. தா...ம்
தாம் தணந்தரி ஜணம்தணந்தரி; தரிதரிதரி;
திமிதிமிதிமி
; கிடகிடகிட ; ஜணஜணஜண ; திவிபதிநுதம்;
பதஸரஸிஜம்
; மகபமநிப ; மரகதநிபம்; மதகரிமுகம்;
ப்ரணவநிததம்

; அஜிதம் அனகம் சுபதம் பரமம்
கனகாம்பரதரணம் ஏக
ரதனம் தத்தித் தகஜணந்த நகதரி சித்தகஜணந்த
நகதரி தக
ஜணந்த நகதரி தாம் தத்தித் தகஜணந்த நகதரிஹ
தித்
தகஜணந்த நகதரி தகஜணந்த நகதரி தாம் –
தத்தித்
தகஜணந்த நகதரி தித்தகஜணந்த நகதரி
தகஜணந்தநக பரம் (ஆ)

---

## பாடல் 27

ராகம்: ஸரஸ்வதி
தாளம்: ஆதி
ஆரோகணம் - ஸரிமபதஸ்
அவரோகணம் - ஸ்நிதபமரிஸ

### பல்லவி

அவராக வருவாரோ வரமாட்டார் இதில்
அதிசய மென்னடி அன்னமே கண்ணன் (அவ)

### அனுபல்லவி

எவருக்கும் மேலான இன்னருளாளன்
யமுனாவனம் பூத்த இனமலர் தாளன்
புவனம் மயக்கும் புல்லாங்குழல் இசையாளன்
புண்ணிய மிகுந்த எங்கள் ராதை மணவாளன்

### மத்யமகால ஸாஹித்யம்

தவமிருந்த காளியன் தலமிசை இருந்து
தாண்டவ மாடிய பதங்கொண்டு
தமால மரநிழல் இருந்து என்னிடம் தனியாக
பேசி அதை நினைவு கொண்டு
குவளை நீல திருமேனி கொண்டன்று
கோவர்த்தனம் சுமந்தது போல - இன்று
குவலய முழுதுள கவலையை ஒருங்கு
கொண்டவரங்கிருந்திங்கு நேராக

சரணம்

தூது சென்ற உந்தன் வாயாடி தனம் கண்டு
தொல்லை என்றெண்ணி விட்டாரோ
நாத குழலிசையில் நவநவமாக ராகம் இணைத்து
விட்டாரோ
ஆதவன் அஞ்சி அஞ்சி அங்கே நிற்க
ஆனந்தமாக நினைந்தாரோ
அடியேனையுந் சைரந்திரி போலவே எண்ணி
ஆகட்டும் என்று விட்டாரோ.

(மத்யமகால ஸாஹித்யம் பாடி பல்லவியை

எடுக்கவும்)

---



பாடல் 28

ராகம் : ஸிம்ஹேந்த்ரமத்யமம்
தாளம் : ஆதி
ஆ - ஸரிகமபதநிஸ்
அ - ஸநிதபமகரிஸ

பல்லவி

அசைந்தாடும் மயில் ஒன்று காணும்! - நம் - அழகன் வந்தானென்று - சொல்வதுபோல் தோணும்! (அசைந்தாடும்)

அனுபல்லவி

இசையாரும் குழல் கொண்டு வந்தான் - இந்த -

ஏழேழ் பிறவிக்கும் இன்பநிலை தந்தான்
திசைதோறும் நிறைவாக என்றான் - என்றும் -
திகட்டாத வேணுகானம் ராதையிடம் ஈந்தான்

மத்யமகாலம்

எங்காகிலும் - எமதிறைவா! இறைவா! எனும்
மனநிறை அடியவரிடம்
தங்கு மனத்துடையான்! - அருள் பொங்கும்
முகத்துடையான்! - ஒரு -
- பதம் வைத்து மறு பதம்தூக்கி - நின்றாட -
மயிலின் இறகாட - மகர குழையாட
- மதிவதனமாட - மயக்கு விழியாட -
மலரணிகளாட - மலர்மகளும் - பா...ட -
இது "கனவோ நனவோ!" - என - மனநிறை
முனிவரும் மகிழ்ந்து கொண்டாட -
(அசைந்தாடும் மயில்)

சரணம்

அசைபோடும் ஆவினங்கள் கண்டு - இந்த -
அதிசயத்தே சிலைபோலே நின்றதுவும் உண்டு

நிசமானசுகம் என்று ஒன்று - இருந்தால்
நீ௵லகில் இதையன்றி - வேறெதுவும் அன்று!
இசையாரும் கோபாலன் இன்று - நின்று -
எழுந்தெழுந்து நடம்ஆட - எதிர்நின்று
ராதைபாட -,

எங்...................................... கொண்டாட (அ)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 29
ராகம் : சாமா
தாளம் : ஆதி
ஆ - ஸரிமபதஸ்
அ - ஸ்தபமகரிஸ்

பல்லவி

ஆடினான் விளையாடினான்
ஐங்கரன் தன்னொடு அறுமுகன் திரு

விளையாடினான் (ஆடி)

அனுபல்லவி

தேடித்தேடி வந்தாரும் விழைய தேவரும்
யாவரும் பூமழை பொழிய
ஆடி வந்தஸுரலோக சுந்தரிகள் ஆலோலம்
பாடிவர கோலாகலமாக (ஆடி)

சரணம்

மூலப்பொருளும் பரமோனப் பொருளும்
ஒன்றாய்
முந்தி நீ முந்தி நானென்றாடுதே - கண்ட
மொழியும் மறையும் தடுமாறுதே
நீலமிடற்கையும் நெடுவரை பெண்கையும்
நேருக்குநேர் நின்றாடுதே - கண்ட நெஞ்சமும்
ஆனந்த கூத்தாடுதே
மேலை எறிந்த பந்தோ கோலங்காட்டி மறைய
விண்கதிர் தன்னைப் பிடித்தாடுதே

மத்யமகால ஸாஹித்யம்

விரிந்த சடைமுடிபோன வெண்மதியும்
மெய்யும் நடுங்குரவாகவும்
விதிமகன் நாரதன் துதியினைக் கூடவும்
மிகமிக தொன்னிசை பாடவும்
திறத்தினொடு ஆனக துந்துபி ஒரு
தனத்தனந்தனம் போடவும்
தண்கதிர் தனது சுகிர்தமென விகிர்தமிட
அதிர்பெருக திகுர்தமென (ஆடி)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 30

ராகம்: பரசு
தாளம்: ஆதி
ஆ எ ஸரிகமபதநிஸ்; அ - ஸ்நிதமதபமகரிஸ

பெரிய புராண கீர்த்தனை

பல்லவி

ஆளாவ தென்னாளோ சிவமே
அடியார்கடியார்க் கடியனாய் (உன்)

அனுபல்லவி

கேளாதளிக்கும் வரமே அண்ட மேலானதற்கும்
பரமே இளம்
தாளான கமல முட்புறமே பதம்
ததிக்க தாமென விதித்த தாளமும் துதிக்க
தாமென மதித்து கதிபெற (ஆளாவ)

சரணம்

புன்மை பிறவி போகவேணும் எடுத்தால்
புண்ணிய பிறவியாக வேணும்
இன்னவரில் ஒருவரைப் போலே
இணையொன்றும்
இல்லாபதத்திணையாகவேணும்(இ)

1. காழிமணம் சிவபாதமகன் திருநாவரசன்
மணிவாசக சுந்தரன் எனும் (இன்ன)
2. சிறுத் தொண்டர் திருநீலகண்ட விறன்
மீண்டநமி நந்தி தண்டி அடிகளெனும் (இன்ன)

3. ஐயடிகள் காடவர்கோன் ஆனாயகணம்
புல்லர் நின்ற சீர்நெடுமாற
கணநாத முனையாடுவாரொடு திருநாளைப்
போவாரெனும் (இன்ன)

4. மெய்பொருளார் பெருமிழலைக் குறும்பர்
ஏனாதிநாத கவிக்கம்பர்
அமர்நீதி நரசிங்க முனையரய சடைய சண்டேச
கலிய காரியாரெனும் (இன்ன)

5. மானக்கஞ்சார நேச பூசலாரொடு வாயிலார்
சோ
மாசிமாற மங்கையர்க்கரசி குங்கிலியக் கலயார்
இளையான்குடி
மாற அறிவாட்டாய கூற்றுவர் கோட்புலி
சாக்கியர் சத்தியள் - சிறப்
புலியர் செறுத்துணையர் புகழ்த்துணையர்
குலச்சிறையர் கழற்றறிவர் இயற்பகையரெனும்
(இ)

6. திருமூல முருக மூர்த்தி அப்பூதிருத்தர

பசுபதியார் இசைஞானியர்
நீலநக்கர் இடங்கழியர் அதிபத்தர் எறிபத்தர்
ஏயர் கோனொடு
நீலகண்ட யாழ்பாண புகழ் சோழ
கோட்செங்கட்சோழ கழற்சிங்கர்
காரைக்கால் நகர்மேவு கனியாரொடு
கண்ணப்பர் குறிப்புத் தொண்டரனும் (இன்ன)

இணையொன்றுமில்லா பதத்திணையா
வேணும். (ஆ)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

## பாடல் 31

ராகம்: காம்போதி
தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதஸா
அ - ஸநிதபமகரிஸா

பல்லவி

ஆக்கப் பொறுத்தவர்க்கு - ஆறப் பொறுக்காமல்
-
அவசரப் படலாமோஹ இது தகுமோஹ -
(ஆக்கப் பொறுத்தவர்க்கு)

அனுபல்லவி

பாக்கியவதி தேவகி தரும் பாலா!
பண்ணார்ந்த குழலூதும் பால கோபாலா! (ஆ)

சரணம்

மத்துப் புரியணைந்து - வாங்கிக்
கடையுமுன்னே -
வம்பு செய்தால் வெண்ணை வந்திடுமோஹ
பண்ணார்ந்த குழலூதும் கண்ணன் உன்
பெயர்சொன்னால் -
வெண்ணை என்ன தானாய்த் திரண்டிடுமோஹ
கத்தும் கறவைக்கு - எத்தனை சொன்னாலும் -
கட்டி வெண்ணையாகக் கறந்திடுமோ

## பாடல் 32

ராகம்: ராகமாலிகை
தாளம்: ஜம்பை

பல்லவி (ராகம்: தர்பார்)

இப்படியும் ஓர்பிள்ளை எங்கேயும் இல்லை
இன்பம் தரும் தொல்லை இதற்கீடிணையும்
இல்லை (இப்படியும்)

அனுபல்லவி

பொற்புயத்தே வனமலரும் பூப்புனையும்
பலராமா
தப்பிதமாகாத உன்தன் தம்பி என்றால்
அறமாமோ

இப்போதே நீ சென்று எங்கள் மொழி ஈதென்று
எந்த விதமோ இதை யசோதையிடம் போய்
சொல்லு (இப்படியும்)

சரணம் (ராகம்: தன்யாஸி)

எப்படியும் உறிக்கலயம் எட்ட முடியா உயரம்
கட்டி ஒரு வகை செய்து காவல் வைத்துப் போன
பின்னர்

(ராகம்: வஸந்தா)

யாரென்று வினவ எம்மை அஞ்சுவோம் என்று
கண்டுன்
பேர்சொல்லி உன்னுடனே பிறந்தோன் என்றான்
பார் இங்கே வந்து தயிர் பானையுள்ளேது எனில்
கார் ஒன்றைத் தவிர்த்த இளங்கன்றொன்றை
காணுமென்றான் (இப்படியும்)

(ராகம்: மத்யமாவதி)

இத்தனையும் செய்து பின்னர் எங்கள் மனம்

நோகு மென்று
முத்தம் ஒன்று ஈந்து நாங்கள் மயங்கி நின்ற வேளையிலே
கத்தைக் குழல் பற்றி எழில் மிக்க மயில் பீலி வட்டம்
சுற்றி ஒரு கையில் குழல் பற்றி
விரைந்தோடினான் (இப்படியும்)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 33

ராகம்: ஆரபி
தாளம்: ஆதி
ஆ - ஸரிமபதஸ்
அ - ஸநிதபமகரிஸ்

பல்லவி

உன்னிலும் எனக்கொரு உற்றார் யாருமுண்டோ

ஒளிமுதலே சிவமே
உள்ளும் புறமு நிறைவான துன்னருளே
உத்தமமான மறைதரு பொருளே
தெள்ளந்தெளிந்திடு ஞானமுன்அருளே
செஞ்சடைமதி தனக்கானது புகலே (உன்)

அனுபல்லவி

தென்னம் புலியூர் திருசிற்றம்பலம் மேவி
தேடிவந்தோருக்காய் ஆடிய பாதமே
தீத்தா கிடதக திமிதத் திரிதக திகுர்தமான
நடமாடிடு மிறையே
வேதாகம் முறை விளங்க வருதிகழ் விகிர்தனே
நெஞ்ச நன்னிறைவே (உன்)

சரணம்

இடம்தேடி உனைநாடி ஏத்தலாமென்றாலோ நீ
இருக்குமிடம் முதுகாடாச்சே
எயிருக்குணவுதேடி ஏத்தலாமென்றாலோ
எரியுநஞ்சு உணவாச்சே

திடமும்நாடி உனை உறவென்று தேட
தெளிந்ததொரு விஷயம்இது காணும்
செயலும் மறிதான மாமனும் துணைதொடர்
மகனும் மிடியானது காணும்
நடனமுமாடி சராசர மெங்கணும்
நல்லவையானதும் கருணையானாலும்
நாடி வந்ததுவும் இன்று தரவேணும் நண்ணிய
முனதுபாதம் புண்ணியம் பெற வேணுமே (உ)

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 34

ராகம்: தோடி
தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதநிஸ்
அ - ஸநிதபமகரிஸ

பல்லவி

உருகாத மனம் என்ன மனமோ (கேட்டு) எங்கள்
(கண்டகதி) ஊதுகுழல் நாதமொடு
காதலுறவாகினவன்
உள்ளமுழுதும் கள்ளம் அள்ளினவையும் கேட்டு
உருகாத மனமென்ன மனமோ
பொல்லா ஊர்வம்பு சுமக்கும் துர்குணமோ
கேட்டு (உ)

அனுபல்லவி

விரிகந்த மந்தார மலரானவேளை மெல்லிரு
மீரான பண்ணாரும் வேலை
அறியான சிதல் என்றால் ஆங்கொருவேளை
ஆனாலும் மனிதர்க்கோ ஆயிரம் வேலை

மத்யமகால ஸாஹித்யம்

நகுநகு மென்றிவை ஞானமுகந்தறிவானது
மயங்கும் அத்தனையோ
நல்லவை அறிந்து அல்லவை எறிந்து மெல்லன
எழுந்து மிகுதவமிதென்று

சரணம்

வணங்காத தலை என்ன தலையோ இல்லை
வணிவாழும் மினைவாசல் நிலையோ அல்லது
அணங்காரின் முகங்கண்ட கலையோ ஆனால்
ஹரிபக்தி என்றால் வீசை என்ன விலையோ

(மத்யமகால ஸாஹித்யம் பாடி பல்லவி
பாடவும்)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 35

ராகம்: காம்போதி
தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதஸ்
அ - ஸ்நிதபமகரிஸ்

பல்லவி

எந்த விதமாகிலும் நந்த முகுந்தனைநீ
இந்த வழி வரும் வகை பாரடீ (எந்த)

அனுபல்லவி

கந்தம் கமழ் குழலி ராதே ராதே என்று
கனிய மனமுருகி புனைந்துரைத்து
கள்ளத்தனமென்று மெள்ள நீ சொல்லி (எந்த)

சரணம்

செய்த தெல்லாம் வஞ்ச மல்லவோ பெண்ணே
சிந்தித்து பாராரிதையே என்னே என்னே

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 36

ராகம்: தோடி

தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதநிஸ்
அ - ஸநிதபமகரிஸ

பல்லவி

ஏனிங்கே வந்து வந்திருந்தென்னென்னமோ
கண்ணனை
வண்ணனைப் பாடுராய் எல்லமறிந்த
விளிவண்டே வண்டே (ஏ)

அனுபல்லவி

வானோடு மண்ணை அளந்தானை என்
மனமோடு உறாவாடி களவாடினானை
வானரக் கொடியோன் தோழனானை

மத்யகால ஸாஹித்யம்

மனைவாசல் என்ற எல்லாம் துறந்து
அறியாது நின்ற அடியோங்கள் முந்தி

சரணம்

வடமாமதுரை நகர் வழி இதோபாரு மதுகர
வாயிசை நிதமுரவாகிட
வண்டே வண்டே பறந்தோடு அங்கேபாடு மட
நல்லார் அங்காயிரம் ஆயிரம்
மாதவன் உறவெனும் காதலியருண்டு வண்டே
வண்டே பறந்தோடு அங்கே பாடு
மலரணிந்தேனை வனமளித்தானை
மனமறிந்தானை வாயாரப் பாடு - அந்த
மங்கையர் இங்கிதம் அறிந்து உனக்கானது
செய்வாரது பாரு (ஏனிங்கே வந்து)

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

## பாடல் 37

ராகம்: சாரங்கா
தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதநிஸ்

அ - ஸ்நிதபமரிகமரிஸ

பல்லவி

ஒய்யாரமாக ஒய்யாரமாக
ஒய்யாரமாக யமுனை நதி ஓரமாக வெகு
நேரமாக வந்தாரவாரமாக
மெய்யாக குழலொன்று ஊதிடுங் கண்ணா
நீலமேனி வண்ணம் கண்டு மனம் ஆடிடுங்
கண்ணா(ஒய்யார)

அனுபல்லவி

கையார மலர் கொண்டு தூவினும் ஆகாதே -
இரு
கண்ணார கண்டு கொண்டு நின்றாலும் ஆகாதே
மெய்யான நிலைவந்து மேவினும் ஆகாதே
மென்மேலும் மேலும் பேராசை கொள்வதும்
தீராதே

மத்யமகாலம்

என்ன சொல்லியும் சொல்லியும் மனமதில்
ஏறாதே
என் இறைவா நீதரும் புன்னகையில் தோயும்
நெஞ்சம் மறுமொழி கூறாதே மாறாதே
மன்னவனே மாதவனே மலர்முக ராதை மகிழ்
மணவாளனே
கன்னல் எனஓடி முன்நிலவில் கூடி
நன்னயமொடு ஒரு புன்னை நிழலாடி

சரணம்

முத்தார மணி துள்ளி மொய்யுவன மாலை ஆட
மோன குறும்பு நகை முன்உதடு வந்து கூட
வித்தாரமான பண்ணில் வேணுமென்று
இசைபாட
வேதங்கள் எல்லாம் தேட ப்ருந்தாவனம் வந்து
கூடகூட

சரணம் (அதிமத்யமம்)

நாநாவிதமான புலந்தரு தொழில்
நான் எங்கென அகல் சரியை கிரியையும்

ஞானங்களொடு பரமும் பரஸுகமும்
நான் இங்கென வரு கருணை முகங்காட்டி
வேறெங்கிலும் இயலாதேன் தொழுதேன்
விழுந்து தஞ்சமென்றடைந்தேன் எனக்
கானந்த நிலை காட்டி அருள்கூட்டி
விண்மதியென ஒளிகாட்டி எனக் கெதிரில்
(ஒய்யார)

---



பாடல் 38

ராகம்: சுருட்டி
தாளம்: ஆதி
ஆ - ஸரிமபநிதநிஸ்
அ - ஸாநிதபமகபாமரீஸ்

பல்லவி

கண்ணல்லவோ ஸ்வாமீ

கார்மேனி கட்டழகா நீ என் (கண்)

அனுபல்லவி

வண்ண மலர் போலும் சின்னஞ்சிறு பெண்கள்
வந்து வந்து நகைப்பதைப் பாராய்
பண்ணுரு குழல் ஊதிடும் பிள்ளாய்
இங்கிதமோ தகுமோ சொல்லாய்
எண்ணமொடும் சினமானது தள்ளாய்
என்னெதிரில் முத்தம் தர நில்லாய்(கண்)

சரணம்

கொய்யுமலர் நீலக்குவளை விழியாலே
வையாது வைகின்ற கண்ணா
சின்னகையளவு வெண்ணை தந்தால் மெய்யவும்
போதா தென்று
பையப்பைய வாதாடுகிறாய் அய்யய் யய்யய்ய
அய்ய என் (கண்)

ஒச்சலொழி வில்லாது - உன் காவல் செய்தால்
ஊராரென்ன சொல்வாரோ கண்ணா

ஆச்சியர்கள் இங்கே வந்து கூச்சலிட்டுப்
போனார்கள்
பேச்சென்ன இனிமேலே - சேச் சேச் சேச்சே
(கண்)

2வது சரணம் முதல் சரணம் போல்

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 39

ராகம்: பேகட
தாளம்: ஆதி
ஆ - ஸகரிகமபதபஸ்
அ - ஸ்நீதபமாகரிஸ்

பல்லவி

கண்கண்ட தெய்வமே - எங்கள்
கதி நீயே குருநாதா கழலே துணை என்ன

கைமேல் பலன் ஆகுமே இதுவே மெய்மெய்
எனலாகுமே (கண்)

அனுபல்லவி

பண்கொண்ட குழலூதும் பரமனடி காட்டி
பக்தியில் முக்தியில் பாட்டினில் ஆசையூட்டி
கண் என்ற குரல் காட்டி காலில் சதங்கை மாட்டி
என்
எண்ணமெல்லாம் ப்ருந்தாவனத்திடை
யோட்டும் (கண்)

சரணம்

சிந்தை கடலாடி விந்தை மிகவான பேரின்ப
முத்து ஒன்று பெற்றேனே உடனே
பாடும் பணி செய்ய கற்றேனே
நந்தகோபன் மனை வந்து பிறந்தவனை நாதா
என்று சொல்ல பெற்றேனே உடனே
ஆதியந்தம் எல்லாம் அற்றேனே

மத்யமகால ஸாஹித்யம்

இத்தனைக்கும் யாரென மிகையாகா
எங்கள் குருநாதனருள் அல்லவோஹ இதை
எத்தனையும் சொன்னாலும் அத்தனை
அமுதூறும்
ஆனந்த நிலை என்று சொல்லவோ. (கண்)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 40

ராகம்: கமாஸ்
தாளம்: ஆதி
ஆ - ஸமகமபதநிஸா
அ - ஸநிதபமகரிஸா

பல்லவி

காணீரே!.................கஞ்சமலர்க்
கண்ணன் வந்து நின்றதுவும், கை

வெண்ணையைத் தின்றதுவும் (காணீரே!)

அனுபல்லவி

தூணிறுத்ததாண நடு தொங்கும் உறுமேலே
துப்புக் கண்டு கொண்டான்! - யாரோ சொல்லி
வைத்தாற் போலே!
நாணிக்கோணி நின்ற ஒரு - நங்கையவள்
மேலே
நல்ல மணங்கமழ்ப்பதம் கொண்டேறி மெல்ல
உரியாடி விந்தைக்களவாடக் (காணீரே!)

சரணம்

ஆனாலும் வெண்ணை வெண்ணை வெண்ணை
என்றான் - கண்ணன்
ஆனாலும் வெண்ணை வெண்ணை வெண்ணை
என்றான் இவனுக்கு
அப்படித்தான் வெண்ணை என்ன சுவையோஹ
அன்னை இவனைப்பெற என்ன தவம்
செய்தாளோ!
ஆனாலும் இனிமேலும் குறையோஹ

போனாலும் வந்தாலும் .... கண்ணன்
- போனாலும் வந்தாலும் - முன்னழகைக்
காட்டிப்
- போனாலும் வந்தாலும் - பின்னழகைக்
காட்டிப்
- போனாலும் வந்தாலும் - தன்னழகைக் காட்டி
என்
- புத்தியை மயக்குறான்! - இதென்னவோஹ

மத்யமகாலம்

புதுமலர் வண்டு-கருவிழியாகப் புன்னகை
தண்ணொளி நிலவென்று ஆகக்
"கருகரு" வென்ன குழலலைந்து ஆடி-
கார்முகிலோ என- ஒளியதுமாக
குளிர்மதி நீலத் தடநுதல் வந்து -
குடிபுகுந்ததெனத் திலகமாக
கொற்றவன் செய்த களவை - "நற்றவம்" எனக்
கருதிகூட நீ பாட - கோவிந்தனும் ஆடக்
(காணீரே)

## பாடல் 41

ராகம்: நாட்டக்குறிஞ்சி
தாளம்: ஆதி
ஆ - ஸரிகம நிதநி பதநிஸா; அ - ஸ்நிதம கமப கரிஸா

பல்லவி
கொடுத்து வைத்த புண்ணியவான்
குற்றமிலாத ஹரிகதையதனை
சற்றுக் கணமேனும் கேட்டவர் எவரோ
கொண்டு பதம் பாடி நின்றவர் எவரோ
குரு பதமலர் தொழுதவர் எவரோ - அவரே
(கொடுத்து)

அனுபல்லவி
கொடுத்து வைத்தவன் என்று எதற்கெதற்கோ சொல்லிக்
கொண்டான் அடித்தவர்காள்! - இதுகேளும்!

நெடுத்த இத்தரை மேலே - ஹரிகதையைத் தவிர
நீரும் மாக்களும் ஒன்றுதான் பாரும்!

மத்யமகாலம்
நின்று - அளவானால் - சாண் எட்டு தானேஹ
நேராக எமன் வந்தால் - அதுவரை தானேஹ
அன்று அவன் கயிறுக்கு - ஒரு சுற்றுத் தானேஹ
அத்தனையும் நேருமுன்னம் - அறிந்தவர் தானே
மிகக் (கொடுத்து)

சரணம்
கண்ணனகலாத சிந்தை செய்யவேணும்!
காலொன்று இற்றதென்று - மற்றவற்றில்
காணும்!
திண்ணமும் எண்ணஎண்ண புண்ணியம் காணும்
திருவருளுக் கிதைவிட வேறென்ன வேணும்

மத்யமகாலம்
சினத்திலும் மனத்திலும் தனத்திலும் உழன்று -
திரிந்து திரிந்து அலைந்தானது வீணே
தெளிந்து மணந்த குருநாதன்வந்து -
திருவருளானது பலனிது தானே

கனவு கண்டதொரு நேரமும் தானே
கட்வாங்கன் கண்டது - அதிசயம்தானே
மனமான முறணெண்ண - கால் ஒன்று தானே
மதிகொண்டு துதிகொண்டு பிழைத்தவர்தானே
மிகக் (கொடுத்து)

---

தலை | அகர வரிசைப் பட்டியல்

பாடல் 42

ராகம்: தேவமனோஹரி
தாளம்: ஆதி
ஆ - ஸரிமபதநிஸ்
அ - ஸ்நிதநிபமரிஸ்

பல்லவி

செய்த தவம் என்னவோ பரந்த கருணை
தேவாதி தேவாநீ
நிரந்தரமும் என்மனம் வந்து குடிகொள்ள

(செய்த)

அனுபல்லவி

கைதான் வெண்ணை தாங்கும் கானக்குழல் தாங்கும்
கார்முகில் அலைந்திடும் மாமலையும் தாங்கும்
மெய்தான் ஒருவேளை மேதினியும் தாங்கும் - நீல
மேனி எழிலான ராதை மணாளா தோகை
முடியாள நீஎன்மனமாள நான் (செய்த)

சரணம்

என்மனம் உன்னிடம் எவ்விதம் என்றாலோ
எண்ணி எண்ணி இரும்பூது எய்யுதே
இன்னவென்றறியாத எண்ணமும் மேலோங்கி
இன்பமென்று என்னை எய்யுதே
உன்முகம் முன்வந்து ஒளிவீச உலகெங்கும்
இன்பமாய் மெய்யுதே
பன்னிலை பாழ்பிறவி மாயையும் பிறவெல்லாம்
பாடாக போயகன்று பொய்யுதேநீ

மத்யமகால ஸாஹித்யம்

பாடவெண்ணி என்மனம் குழலென்று ஆகும்
பசிக்கு வெண்ணை என ஆனாலும் ஆகும்
ஆடவெண்ணி என்மனம் அரவு படமாகும்
அத்தனைக்கும் ராதையும் ஆனாலும் ஆதும்
நான் (செய்)

---



பாடல் 43

ராகம்: தோடி
தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதநிஸ்
அ - ஸநிதபமகரிஸ

பல்லவி

தாயே! யசோதே! - உந்தன் ஆயர் குலத்துதித்த
மாயன் கோபாலக்ருஷ்ணன் செய்யும்
ஜாலத்தைக் கேளடி! (தாயே)

அனுபல்லவி

தையலே! கேளடி உந்தன் பையனைப்
போலவே - இந்த
வையகத்தில் ஒரு பிள்ளை ஐய்யய்ய! நான்
கண்டதில்லை (தாயே)

சரணம்

1. காலினில் சிலம்பு கொஞ்சக் கைவளை
குலுங்க - முத்து
மாலைகள் அசையத் தெரு வாசலில் வந்தான்!
காலசைவும் - கையசைவும் - தாளமோடிசைந்து
வர
நீலவண்ணக் கண்ணனிவன்
*நிர்த்தனமாடுகிறான்!
பாலனென்று தாலியணைத்தேன்! - அணைத்த
என்னை

மாலையிட்டவன் போல் - வாயில்
முத்தமிட்டாண்டீ!
பாலனல்லடி! உன்மகன் - ஜாலம்மிக செய்யும்
க்ருஷ்ணன்
நாலுபேர்கள் கேட்கச் சொல்ல - நாணமிக
வாகுதடீ! (தாயே)

2. அன்றொருநாள் இந்தவழி வந்த
விருந்திருவரும்
அயர்ந்து படுத்துறங்கும் போதினிலே -
கண்ணன்
தின்றதுபோகக் கையில் இருந்த வெண்ணையை
- அந்த
விருந்தினர் வாயில் நிறைத்து மறைந்தனனே!
நிந்தைமிகு பழியிங்கே பாவமங்கே என்றபடி
சிந்தைமிக நொந்திடவும் செய்யத்தகுமோ
நந்தகோபற்கிந்தவிதம் - அந்தமிகு பிள்ளைபெற
நல்லதவம் செய்தாரடி - நாங்கள் என்ன
செய்வோமடி (தாயே)

3. எங்கள்மனை வாழவந்த - நங்கையைத்
தன்னம் தனியாய்

துங்க யமுனாநதிப் போகையிலே - கண்ணன்
சங்கையுமில்லாதபடி - பங்கயக் கண்ணால்
மயக்கி
எங்கெங்கோ அழைத்துச் சென்று நிசி வந்தான்
"உங்கள்மகன் நான் என்றான்! - சொல்லி
நின்றபின்
தங்குதடையின்றி வெண்ணைத் தாரும் என்றான்
இங்கிவனைக் கண்டு இள - நங்கையரைப்
பெற்றவர்கள்
ஏங்கி - எண்ணித் தவிக்கின்றார்! - நாங்கள்
என்ன செய்வோமடீ! (தாயே)

4. தொட்டிலிலே பிள்ளை கிள்ளி விட்டதும்
அவை அலற
விட்ட காரியம் அகல வெண்ணை தின்றான்!
கட்டின கன்றை யவிழ்த்து - எட்டியும்
ஒளித்துவிட்டு
மட்டிலாத் தும்பை கழுத்தில் - மாட்டிக்
கொண்டான்!
விட்டு விட்டு - "அம்மே" என்றான் கன்றினைப்
போலே
அட்டியில்லாத மாடும் "அம்மா" என்றதே!

கிட்டின குவளையோடும் எட்டினால் "உன் செல்வமகன்!"
பட்டியில் கறவையிடம் - பாலை யூட்டுறானடீ!
(தாயே)

5. சுற்றி சுற்றி என்னை வந்து - அத்தை வீட்டு வழி கேட்டான்
சித்தத்துக் கெட்டும் வரையில் சொல்லி நின்றேன்
அத்துடன் விட்டானோ பாரும் ஆத்தங்கரை வழி கேட்டான்
அத்தனையும் சொல்லிவிட்டு நின்றேன்
வித்தகமாய் ஒன்று கேட்டான் நாணமாகுதே!!
முத்தத்துக்கு வழிகேட்டு சத்தமிட்டாண்டீ
அத்தனை இடம் கொடுத்து - மெத்தவும் வளர்த்து விட்டாய்!
இத்தனை அவனைச் சொல்லக் குத்தமில்லையேயடி! (தாயே)

6. வெண்ணை வெண்ணை தாருமென்றான்!
வெண்ணை தந்தால் தின்றுவிட்டு
பெண்ணைத் தாரும்! என்று கண்ணடிக்கிறான்!
வண்ணமாய் நிருத்தமாடி - மண்ணினைப்

பதத்தால் எற்றிக்
கண்ணிலே இறைத்துவிட்டுக் களவாடினான்!
பண்ணிசையும் குழலூதினான்! - கேட்டு நின்ற
பண்பிலே அருகில் வந்து - வம்புகள் செய்தான்!
பெண்ணினத்துக்கென்று வந்த - புண்ணியங்கள்
கோடி கோடி
எண்ணீ உனக்காகுமடி - கண்ணியமாய்ப்
போகுதடீ! (தாயே யாசோதே!)

7. முந்தாநாள் - அந்தி நேரத்தில் செந்தமுடன்
கிட்டே வந்து
வித்தைகள் பலவும் செய்து விளையாடினான்
பந்தளவாகிலும் வெண்ணை - தந்தால்
விடுவேனென்று
முந்துகிலைத் தொட்டிழுத்துப் போராடினான்
அந்த வாஸுதேவன் இவன்தான் - அடி
யசோதே!
மைந்தனெனத் தொட்டிழுத்து மடிமேல்
வைத்தேன் வைத்தால்
சுந்தர முகத்தைக் கண்டு - சிந்தையுமயங்கு
நேரம்
அந்தர வைகுந்தமோடு - எல்லாம்

காட்டினானடி! (தாயே யசோதே!)

---

[தலை ](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 44

ராகம்: வேளாவல்லி
தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதநிதநீஸ்
அ - ஸநிதபமகரிஸ

பல்லவி

தவமொன்றும் அறியாத பாமரத்தி பதத்
தாமரைக்கே நமஸ்காரம்

(மத்யமகாலம்)
தானாகி தன்னருளொடு தராதல மெங்கும்
உள்ளம் புறமொடு துலங்கும்
தருணா மழை போலு வந்த தயாநிதியே உன்

சன்னதியே பெரும் (தவ)

அனுபல்லவி

குவளை நீலமலர் கோலக் கண்ணா
கோவிந்த தாமோதரானந்த கண்ணா - எனக்

(மத்யமகாலம்)
கூவி குறை துறந்த அடியவர் தம்மொடு
குணங் கலந்திடு திருவே கண்டு கொள்ளா
திருக்க
மாயை எனும் திரை மூடி மறைந்திடும் உருவே
என்
ஆவி உடல் பொருள் சுமந்த பரமானந்த கற்பகத்
தருவே
ஆதியந்த நடுவிலாது நின்றிடும் ஆனந்த
நிறைவே அறவே (தவ)

சரணம்

புனைந்தான் ஒருவனை வேடமை நீங்கி புத்தி
அற்றாரங்கு காணார் அது

போலே உன் மாயையை தாண்ட இயலாது
புண்ணியத்தாரும் மயங்கி போனார்
முனைந்தார் தவநிலை முனிவரும் யோகியரும்
முற்றும் துறந்தவைந்து ஆனார் உன்
மோகன புன்னகைக்கு தாகமும் மேலிட்டு
மோர் கடைந்து விற்கும் நிலை கோபியர்கள்
ஆனார்

(மத்யமகாலம்)
புரியாத மாயை யுந்தன் லீலை யல்லவோ
புத்தியற்ற நானுமதை கண்டு கொள்ளவோ
சரியான தத்துவங்கள் உன்னை யல்லவோ
தானாக கொண்ட தென்றால் நானென்ன
சொல்லவோ.

---

[தலை](#) | [அகர வரிசைப் பட்டியல்](#)

பாடல் 45

ராகம்: ஆரபி

தாளம்: ஆதி
ஆ - ஸரிமபதஸ்
அ - ஸ்நிதபமகரிஸ

பல்லவி

தேடி அருள வந்தான் தேவி திருவேதவல்லி முகங்காண
தேவதேவன் திருவல்லிக்கேணி கரை (தேடி)

அனுபல்லவி

நாடி தவமுறும் பார்க்கவ முனிக்காக நல்ல திருவேதவல்லி தனக்காக
பாடிப்பரவும் தொண்டர் பக்தி தனக்காக பக்தி இல்லாதவரை சுத்தி வளைத்தாக
பக்குவமான மனதறிந்தொரு கணம்
பாதமலரினையும் காதலுறவாக
பண்ணார பற்றிய தவநிலையது முனம்
ஒண்ணாத நிலைபெறும் புண்ணியந்தனக்காக
(தேடி)

சரணம்

கள்ள மறியாத தன்னைக் காட்டிக் கொடுக்க வந்த
கான முனி நாரதரைக் காண வந்தானோ
காதல் வலை விரித்து கத்து மாட்டையும் வைத்து
கட்டிப் பிடித்தானவனை காண வந்தானோ

பிள்ளைக்கறி முகத்தன் பெற்றவன் பித்தானான்
பெண்ணைக் கண்டழைக்கவும் காண வந்தானோ
தேவாதி தேவன் தெள்ளிய சிங்கன் தேடித்தேடி இந்த திருத்தலம் காண
திரைகடவிடைமுனம் அலைந்தது போக
சிகரமந்தரந்தனை சுமந்ததுபோக
அரனயன் அமரரும் பணிந்ததுபோக
அத்தனையும் விட்டு இங்கு அந்தரங்கமாக
(தேடி)

---

பாடல் 46

ராகம்: உசேனி
தாளம்: ரூபகம்
ஆ - ஸரிகமபநிதநிபதநிஸ்
அ - ஸ்நிதமபமகரிஸ்

பல்லவி

தேரில் வந்தானோ (வேலன்) இங்கு நேரில் நின்றானோ
சீரோங்கும் ஷேத்திரமாகிய சிக்கல் சிங்கார
வேலன் நேராய் இத்திக்கில் (தேரில்)

அனுபல்லவி

பாரி ஜாத மலர் வாஸம் பக்கம் எங்கும் மணம் வீசும் அந்த
காரியம் உன் கைகள் பேசும் கந்தனுக்குன்
பேரில் ஒயாத நேசம் (தேரில்)

மத்யம கால ஸாஹித்யம்

கடம்ப மலர் மாலை தோளன் கன்னிக் குறத்தி மணவாளன்
திடமாடிய மயிலேறிய சிங்கார வேலவன் இங்கு (தேரில்)

சரணம்

பாற்குளம் கீழ் கரை அன்று உன்னை பார்த்து மயங்கி நான் நின்று
யார்க்கும் தெரியாது என்று நீ அகந்தை கொண்டாயோடி நன்று நன்று

மத்யம் கால ஸாஹித்யம்

அகங்காரம் செல்லாதடி அங்காரகம் பொல்லாதடி
சிங்கார வேலன் செய்த திரிஸமனிது தரிசனம் தர (தேரில்)

---

## பாடல் 47

ராகம்: சக்ரவாகம்
தாளம்: ஆதி
ஆ - ஸரிகமபதநிஸ்
அ - ஸநிதபமகரிஸ்

பல்லவி

த்யாக ராஜ பரமேசா (ஶ்ரீ)
சரணாகத வருணாலய கருணாலய கமலாலய தடமகலா
ஆரூர் த்யாகராஜ பரமேசா

சமஷ்டி சரணம்

நாகமதியொடு கங்ஹஹ நதிபுனைந்த -
ஞான வரத புவனேசா -

மத்யமகால ஸாஹித்யம்

நந்தி ப்ருங்கி மதமணிமானொடு முசுகுந்த
னிந்திரனும் மதங்க முனிவரும்
ஞானியர் தொழும் அஜாபா நடனத்திரு
நாதமுழங்க வீதிவிடங்க ஆரூர் (தீயா)

---



பாடல் 48

ராகம்: நாட்டை
தாளம்: ஆதி
ஆ - ஸரீகமபநிபதநிஸ்
அ - ஸநிபமரிஸ

பல்லவி

